# தமிழ்நாடு அரசு

# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)**

**பாடம் : இந்திய அரசியலமைப்பு**

**பகுதி : அடிப்படை கடமைகள்**

**© காப்புரிமை :**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)** க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

## அடிப்படை கடமைகள் - FUNDAMENTAL DUTIES

- ஆரம்பத்தில் (1950) அடிப்படை கடமைகள் அரசியலமைப்பில் இடம் பெறவில்லை.
- ஸ்வரன்சிங் குழுவின் பரிந்துரைப்படி **1976 – 42** வது சட்டதிருத்தபடி PART -IV(A) அடிப்படை கடமைகள் அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டது.
- ஆரம்பத்தில் (1976) 10 அடிப்படை கடமைகள் இருந்தது. தற்போது 11 அடிப்படை கடமைகள் உள்ளது.
- **2002** – **86**-வது சட்டதிருத்தபடி 11-வது அடிப்படை கடமை **ART 51-A(K)** சேர்க்கப்பட்டது.(86-வது சட்டதிருத்தப்படி ART-21(A)-ம் சேர்க்கப்பட்டது.
- அடிப்படை கடமைகளை நீதிமன்றத்தின்மூலம் நடைமுறைபடுத்த இயலாது (அ) தீர்வு காண இயலாது.

### ART-51 A (A)

- அரசியலமைப்பு சட்டப்படி நடத்தல், தேசியகொடி, தேசிய கீதம் (ம) தேசியசின்னங்களுக்கு மதிப்பளிக்க வேண்டும்.

### ART-51 A (B)

- நாட்டின் விடுதலை போராட்ட வீரர்களின் உன்னத உணர்வுகளை நினைத்து போற்ற வேண்டும்.

### ART-51 A (C)

- நமது நாட்டின் இறையாண்மை, ஒற்றுமை (ம) ஒருமைப்பாட்டையும் போற்றி பேணி பாதுகாக்க வேண்டும்.

### ART-51 A (D)

- நாட்டின் பாதுகாப்பில் அக்கறை கொள்ள வேண்டும், தேவை ஏற்பட்டால் பாதுகாப்பு பணியில் ஈடுபட வேண்டும்.

### ART-51 A (E)

- சகோதரத்துவத்தையும், நல்லிணக்கத்தையும் உருவாக்க முனைய வேண்டும்.

### ART-51 A (F)

- நமது பண்பாடு (ம) பன்முக பாரம்பரிய பண்பாட்டின் மேன்மையை மதித்து பாதுகாக்க வேண்டும்.

## ART-51 A (G)

- காடுகள் (அ) வனங்கள், ஏரிகள், ஆறுகள் (ம) வனவிலங்குகள் போன்ற இயற்கை சுற்றுப்புற சூழலை பாதுகாத்து மேம்படுத்தி தரம் உயர்த்துதல், வாழும் உயிரினங்கள்மீது இரக்கம் கொள்ளவேண்டும்

## ART-51 A (H)

- அறிவியல் மணப்பான்மை, மனிதநேயம், ஆய்வு மனப்பான்மை ஆகியவற்றை மேம்படுத்த வேண்டும்.

## ART-51 A (I)

- நாட்டின் பொதுசொத்துக்களை அக்கரையுடன் பாதுகாக்க வேண்டும் (ம) வன்முறையை கைவிட வேண்டும்.

## ART-51 A (J)

- அனைத்து துறைகளிலும் மிகச்சிறந்த நிலையை அடைய முயற்சி செய்தல், நம்நாடு தொடர்ந்து முன்னேறி உயர்ந்த நிலையை அடைய பாடுபட வேண்டும்.

## ART-51 A (K)

- **6-14** வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் (பெற்றோர் (அ) பாதுகாவலர்) கல்விபெற வாய்ப்பை ஏற்படுத்தி தர வேண்டும்.

- அடிப்படை கடமைகள் மீதான 1999-ல் அமைக்கப்பட்ட குழு = வர்மா கமிட்டி
- நற்சாட்சி குழு தலைவர் = அல்லாடி கிருஷ்னசாமி ஐயர்
- பணிகளை முறைபடுத்தும் குழு தலைவர் = ராஜேந்திரபிரசாத்
- மத்திய அதிகாரங்கள் குழு தலைவர் = ஜ.நேரு
- சட்டத்தின் ஆட்சி பற்றி கூறியவர் = டெய்சி